## "தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்"

அன்புடையீர்,

வணக்கம். எமது வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி) பழைய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சமூக, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு **11.08.1947,** திங்கட்கிழமையன்று ராவ் பகதூர் **M.S.P. செந்திக்குமார நாடார்** அவர்களின் பெருமுயற்சியில் தொடங்கப்பட்டதாகும். இக்கல்லூரி இடைநிலை வகுப்பு மற்றும் 2 இளநிலைப் படிப்புடன் முதல் கல்வியாண்டில் அடி எடுத்து வைத்தது. தற்பொழுது 17 இளநிலைப் படிப்பு 15 முதுநிலைப் படிப்பு மற்றும் 10 துறைகளில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புடன் ஆல விருட்ஷமாய் வளர்ந்துள்ளது. இது மாணவர்களின் கற்றல், திறன் வெளிப்பாடு மற்றும் பணி வாய்ப்பு, துறை சார்ந்த ஆய்வுகள் போன்றவற்றின் அடிப்படையிலான மனித வள மேம்பாட்டுத் துறையின் மதிப்பீட்டில் **இந்திய அளவில் 39ஆவது** இடத்தையும் **தமிழக அளவில் 13ஆவது** இடத்தையும் பெற்றுள்ளது.

கடந்த கல்வியாண்டில், "**தமிழ் இலக்கியப் பதிவுகளில் உறவுகள்**" என்ற கருப்பொருளைக் கொண்டு ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அக்கருத்தரங்கம் **20.08.2016, சனிக்கிழமையன்று** உலகெங்கும் பரவி இருக்கும் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களின் சீரிய பங்களிப்பால் **245** ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட **2** தொகுதிகளுடன் நடைபெற்றது.

நடப்புக் கல்வியாண்டில் எமது கல்லூரியின் 70ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக **"தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்"** என்ற பொருண்மையில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டு உள்ளோம்.

"தமிழன் தனது பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் பொருளாழம் மிகுந்த சொற்களைத் தேர்ந்து பயன்படுத்துவதில் வல்லவன்" என்பதை வரலாற்றுச் சான்றுகள் மெய்ப்பிக்கும். தமிழில் உள்ள ஒவ்வொரு சொல்லுமே பயன்பாட்டின் பின்னணியிலேயே தோற்றம் பெற்றுள்ளது. இங்கே தொல்காப்பியரின், "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற நூற்பாவும் நினைவு கூரத்தக்கதாகும். முன்னோர்கள் முன்னத்தி ஏர்களாக நின்று தாம் வழிவழியாகப் பின்பற்றி வந்த பண்பாட்டைப் பின்வரும் தலைமுறையினர்க்குக் கடத்தி வருகின்றனர். இத்தகைய செயலால் தான் தொன்மை வாய்ந்த தமிழ்ப்பண்பாடு, பழக்கவழக்கம், தொழில் முறைகள் இன்று வரை நிலைபெற்றும் தொடர்ந்து விரிவாக்கம் பெற்றும் வருகின்றன.

'வழிபாடு' என்ற சொல் வழி + படு என்று பிரிந்து 'வழிப்படுத்துதல்' என்ற பொருளில் பயன்பாட்டில் உள்ளது. வழிபாடு முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ஏதுவாகின்றது. சங்க இலக்கியங்களில் வித்திடப்பட்ட 'நடுகல் வழிபாடு' பிற்காலத்தில் குலதெய்வ வழிபாடாக மாற்றம் பெற்றது. ஆரியப் பெருந் தெய்வ துதிபாட்டிலிருந்து இவ்வழிபாட்டுத் தன்மை முற்றிலும் மாறுபட்டது. ஏனெனில் மனித வழிபாட்டு நிலையிலிருந்து தொடக்கம் பெற்றதே தமிழிலக்கியங்கள் ஆகும். சில இடங்களில் இவ்வழிபாடு தனிமனிதத் துதியாகவும் உருமாற்றம் பெற்றுவிட்டது. இத்தகைய பன்முகத் தன்மை வாய்ந்த வழிபாடு இலக்கியங்களில் எங்ஙனம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது காலப் போக்கில் எத்தகைய மாற்றங்களுக்கு உள்ளானது. வழிபாட்டில் நவீனத்தின் தாக்கத்தையும் மரபின் நிலைப்பையும் அடையாளம் காணும் நோக்கில் இக்கருத்தரங்கம் திட்டமிடப்பட்டுள்ளது.

## "ஆய்வுக்கான களங்கள்"

### "தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்"

என்னும் பொருண்மையிலான ஆய்வு, கீழ்காணும் களங்களைக் கொண்டதாக அமையப் பெறலாம்.

1) இயற்கை வழிபாடு
2) நடுகல் வழிபாடு
3) குலதெய்வ வழிபாடு
   1) இனம்
   2) சாதியம்
   3) குழு
4) பெருந் தெய்வ வழிபாடு
5) தனிமனித வழிபாடு
   i) அரசர்
   ii) வள்ளல்
   iii) தலைவர்கள் (அரசியல், சாதி, சமயம், அமைப்பு, தேசியம், நிறுவனம்)
6) வழிபாடு – துதிபாடு
7) உற்றுநோக்கல் மற்றும் ஊடகக் காட்சிகள்

## கட்டுரையும் கட்டணமும்

கட்டுரை A4 தாளில் பாமினி எழுத்துருவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும். கட்டுரையை மின்னஞ்சலிலோ குறுந்தகட்டிலோ (CD) வழங்க வேண்டுகிறோம்.

ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் ISBN எண்ணுடன் நூலாக்கம் செய்யப் பெற்று கருத்தரங்க நாளிலேயே வழங்கப்படும். மேலும் ISSN எண்ணுடன் இணைய ஆய்விதழிலும் இடம் பெறும்.

**பேராசிரியர்கள் ரூ. 600/-**

**ஆய்வாளர்கள் ரூ. 400/-**

கட்டுரைக்குரிய கட்டணத்தை Principal, VHNSN College, Virudhunagar என்ற பெயரில் விருதுநகரில் மாற்றத்தக்க வரைவோலையாக (DD) எடுத்து அனுப்பவும். அல்லது Principal, VHNSN College, Virudhunagar (Tamilnad Mercantile

Bank) கணக்கு எண். 004 1000 50 304044 (IFSC Code TMBL0000 004) இல் பணத்தைச் செலுத்தலாம். கட்டணத்தை வங்கிக் கணக்கில் பணமாகச் செலுத்துபவர்கள் ரசீதின் நகலைக் கட்டுரையுடன் கண்டிப்பாக அனுப்பவும். பகுதி நேர ஆய்வாளர்கள் தொடர்புக்கு இல்ல முகவரியைக் குறிப்பிடவும். கருத்தரங்கில் பங்கேற்க இயலாதவர்கள் ஆய்வுக் கோவையை அஞ்சல் வழியே பெற ரூ.100/– கூடுதலாகச் செலுத்தவும்.

**31.07.2017, திங்கட்கிழமைக்குள்** பெறப்படும் ஆய்வுக்கட்டுரைகள் மட்டுமே கருத்தரங்க ஆய்வுக் கோவையில் இடம் பெறும்.

இக்கருத்தரங்கில் தமிழ் இலக்கிய ஆர்வலர்களையும் பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களையும் தங்களின் ஆய்வுச் சிந்தனையைப் பதியமிட அழைக்கின்றோம்.

## கருத்தரங்க அமைப்பாளர்கள்

தலைவர்

முனைவர் **பா. சுந்தரபாண்டியன்** அவர்கள்

கல்லூரி முதல்வர்

துணைத் தலைவர்

முனைவர் **N. அசோக்குமார்** அவர்கள்

இயக்குநர்

செயலர்

முனைவர். **கா. ஸ்ரீதர்**

முதுகலைத் தமிழ்த் துறைத் தலைவர்

## கருத்தரங்க உறுப்பினர்கள்

பேரா **செ. சாந்தி**

பேரா **இரா. ஜீவா**

முனைவர் **சு. தங்கமாரி**

பேரா **சோ. ஹரிபாண்டிராஜன்**

முனைவர் **செ. துர்காதேவி**

# "தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்"

## பதிவுப் படிவம்

பெயர் :

பணியிடம் / பயிலும் நிறுவன முகவரி :

இல்ல முகவரி :

அலைபேசி எண் :

கட்டுரைத் தலைப்பு :

தொகை :

வங்கியின் பெயர் :

வரைவோலை எண் :

இடம் :

நாள் : கையொப்பம்

(இந்தப் படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

**கட்டுரை மற்றும் வரைவோலையை அனுப்ப வேண்டிய முகவரி**

முனைவர் **சு. தங்கமாரி**

உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை,

வி.இ.நா.செ.நா. கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்

அலைபேசி – 98 94 10 21 30

மின்னஞ்சல் – pgtamil@vhnsnc.edu.in

Estd : 1947

# வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)

(தேசிய தர மறுமதிப்பீட்டில் "A" தரம் பெற்றது)

விருதுநகர்.

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## அறிவிப்பு மடல்

# "தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்"

நாள்

**11.08.2017**

**வெள்ளிக்கிழமை**

நிகழிடம்

## வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)